[18th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எஸ். மணி : போலீஸார் தவறு செய்தால் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் போலீஸார் தவறு செய்கிறபொழுது போலீஸ் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தால், அவர்கள் விசாரிக்க மாட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அவ்வாறு சொல்லவில்லை. போலீசார் தவறு செய்து, அரசாங்கம் அது தவறு இல்லை என்று நினைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், அப்பொழுதுதான் தனிப்பட்டவர்கள் வழக்குத் தொடரலாம் என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : நாங்கள் யாரையும் கைது செய்ய மாட்டோம், மாப்பிள்ளை மாதிரி மாலை போட்டுக்கொண்டு வரலாம் என்று முழங்கிக்கொண்டிருந்த முதல் அமைச்சர் அவர்கள் இப்படி திடீரென்று 1,000 பேர்களைக் கைது செய்யவேண்டிய மாறுதல் நிலைமைக்கு வந்த காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாப்பிள்ளை என்ற வார்த்தை என்னிடமிருந்து வரவே இல்லை. கனம் அங்கத்தினர் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம் தங்களைப்பற்றி. மாப்பிள்ளை என்று நான் சொல்லவில்லை. சொல்லமாட்டேன். என் வாயிலிருந்து அந்தச் சொல் வரவில்லை. அவ்வப்பொழுது நிலைமைக்குத் தக்கவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். முதலில் கைது செய்யமல் இருக்கலாம். கொஞ்ச நாளைக்குப் பிறகு அரசாங்கத்திற்குத் தகவல் வரலாம். போலீஸாருக்கும் தகவல் வந்து அரசாங்கத்தினிடம் தெரிவிக்கலாம். அவ்வப்பொழுது கிடைக்கிற தகவலையொட்டி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

* 266 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) ராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை, கீழ பசலை, மேல பசலை, வண்ணிக்குடி கிராமங்களிலுள்ள அரிஜனங்கள் பால் விநியோக கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரும்படி, 1962-ல் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை யாது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மேற்படி நான்கு கிராமங்களில் உள்ள ஹரிஜனங்களிடமிருந்து 1962-ல் அரசாங்கத்திற்கு எந்த விதமான முறையீடும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) The Government did not receive any representation from the Harijans of the above four villages in 1962.

(*b*) Does not arise.

State Forensic Science Laboratory

267 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether medico-legal and chemico-legal examinations are carried out on cases referred by the Mysore and Kerala States in the State Forensic Science Laboratory, Madras?

18th March 1965]

THE HON. SRI P. KAKKAN : Examination of medico legal cases relating to fire arms and ballistics *only* from Mysore and Kerala States are undertaken in the State Forensic Science Laboratory, Madras.

சுடுபடைக் கலங்கள், எறிபடை இயல் (ballistics) இவை சம்பந்தமாக மட்டும், மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து அனுப்பப்படும் மருத்துவ சட்ட வழக்குகள் (Medico Legal Cases) சென்னை மாநில சட்டம் சார்ந்த விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் (State Forensic Science Laboratory) பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். வி. கரிவேங்கடம் : போரன்சிக் விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் மைசூர், கேரள அரசாங்கங்கள் அனுப்புகிற விஷயங்களெல்லாம் ஆராய்ந்து பார்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதற்காக அவர்கள் நமது சர்க்காருக்குச் சென்ற ஆண்டு எவ்வளவு கட்டணம் செலுத்தியிருக்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : சென்ற ஆண்டு செலுத்திய கட்டணம், அந்தத் தொகையைப்பற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை. இருந்தாலும், " Flat rate of Rs. 30 only for the first and Rs. 15 for each of the subsequent articles subject to a minimum of Rs. 60 " என்ற தகவல் இருக்கிறது.

மாவட்டத் தலைமையிடங்களில் நியாய விலைக் காய்கறிக் கடைகள்

*** 268.** கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு **அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரில் இருப்பதைப் போன்று நியாயவிலைக் காய்கறிக் கடைகளை மாவட்ட தலைநகரங்களில் திறக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சென்னை நகரத்தில் மட்டும் ஆங்காங்கு நியாய விலைக் காய்கறிக் கடைகள் வைத்திருக்கிறார்கள். அதேபோல் மாவட்டங்களிலும் ஏன் வைக்கக்கூடாது ? மாவட்டம் என்ன பாவம் செய்தது என்று அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : பாவம் ஒன்றையும் செய்யவில்லை. சென்னை நகரத்தில் கூட அரசாங்கம் நேரடியாகத் தலையிட்டுக் காய்கறி கடைகளை நடத்துகிறது என்பது அல்ல. இங்கு இருக்கக்கூடிய வியாபாரிகள் " பேர் பிரைஸ் ஷாப் " நடத்தவேண்டும் என்று முயற்சி எடுத்து, அரசாங்கத்தினிடம் சில உதவிகளைக் கேட்டார்கள். அவைகளை அரசாங்கம் செய்து கொடுத்தது. இதுபோலவே ஜில்லா தலைநகரங்களிலும் வைக்க வேண்டும் என்ற முயற்சிகளை அரசாங்கம் கவனிக்கும்பொழுது, அந்த ஜில்லாவைச் சேர்ந்தவர்கள், கூட்டுறவு அமைப்பிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ இதற்கான முயற்சி எடுத்திருந்தால், அரசாங்கம் அதற்கு வேண்டிய கவனம் செலுத்தி, உதவி செய்திருக்கும். எனக்கு இருக்கக் கூடிய தகவல்படி பல ஜில்லாக்களில் முயற்சி எடுத்தார்கள், ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

திரு. கோ. சி. மணி : இந்த நியாய விலைக் காய்கறி கடைகளுக்குக் கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து வாங்கப்படுகிறதா, அல்லது தனிப்பட்ட ஏஜெண்டுகளிடமிருந்து வாங்கப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் வியாபாரிகள் பலர் சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய பல பகுதிகளில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்து அவைகளை நடத்திவருகிறார்கள். ஆகையினால், மொத்த வியாபாரிகளிடமிருந்து தான் வாங்குகிறார்கள்.